# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.12 (L.W.19)

| | | | |
|---|---|---|---|
| Name | : Pavithra | Caste | : இந்து |
| Father's Name | : ரவிக்குமார் | Calling | : House wife |
| Village | : குச்சிப்பாளையம் | Religion | : |
| Taluk | : வேலூர் | Age | : 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.01.2025.

(A1 to A5 present, A6 absent and his absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். என் கணவருக்கு 47 வயதாகிறது. எனக்கு 31 வயதாகிறது. எனக்கு ஒரே மகள் ரிஷிதா. அவளுக்கு 13 வயதாகிறது. எனது கணவர், என் அம்மாவின் உடன்பிறந்த தம்பி ஆவார். நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.ஆ.13 ல் உள்ள நபரை எனக்கு தெரியும். அ.சா.ஆ.14 ல் உள்ள மற்ற நபர்களை தெரியாது. அ.சா.ஆ.13 ல் உள்ள நபர் பெயர் ஷமில் பாஷா. ஆம்பூரை சேர்ந்தவர்.

நான் அகரம்சேரியில் உள்ள ஷீ கம்பெனிக்கு 2014 ல் வேலைக்கு சென்றேன். அப்போது எனக்கு, ஷமில் பாஷா பழக்கம் ஆனார். நான் கம்பெனியில் லெதர் கட்டிங்கில் இருப்பேன். அவர் வேறு கம்பெனியில் இருந்து லெதர் கொண்டு வந்து எங்கள் கம்பெனிக்கு கொடுப்பார். அவரிடம் இருந்து பெற்று கட்டிங் செக்ஷனில் நான்தான் தருவேன்.

அதன்பின்னர் எனக்கும், என் கணவருக்கும் 2014 ல் இருந்து பிரச்சனை ஆனது. 24.05.2015 அன்று சாயங்காலம் 4 மணிக்கு நான் வீட்டை விட்டு வெளியே வந்தேன். அதன்பின்னர் நான் சென்னைக்கு பேருந்தில் போனேன். போய்விட்டு அன்று இரவு கோயம்பேடு பேருந்து நிலையத்தில் தங்கிவிட்டேன்.

மறுநாள் காலை 25-ம்தேதி AVM studio-க்கு போனேன். அங்கிருந்த செக்யூரிட்டி இங்கெல்லாம் வேண்டாம், தெரிந்தவர்கள் இருந்தால் கூட்டிட்டி வாங்க என்று சொல்லி அனுப்பினார். நான் சினிமா சான்ஸ் கேட்க சென்றேன். அதன்பின்னர் எனக்கு தெரிந்த சுரேஷ் என்பவருக்கு போன் செய்தேன். அவர் வந்து என்னை சென்னை சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனுக்கு அழைத்து சென்றார்.

அதன்பின்னர் எனக்கு ஷமில் ஞாபகம் வந்தது. ஷமிலுக்கு போன் செய்தேன். அவர் போன் எடுக்கல. அதன் பின்னர் தான் போன் எடுத்தார். நான், அவரிடம் வெளியே வந்துவிட்டேன். வேலை வாங்கிகொடுங்கள் என்று அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் வேண்டாம் வீட்டிற்கு போய்விடு, அதெல்லாம் சரியா வராது என்று சொன்னார். நான்தான் தொந்தரவு செய்து வேலை வாங்கி கொடுங்கள், நான் வீட்டிற்கு போகமாட்டேன் என்று சொன்னேன். அதன் ஷமில் சரி என்று சொல்லிவிட்டு, ஈரோடு வாங்கள் என்று சொன்னார்.

சுரேஷ் என்பவர் எனக்கு ஈரோடுக்கு டிக்கெட் எடுத்துக் கொடுத்தார். அதன்பின்னர் நான் ஈரோடுக்கு டிரெயினில் சென்றேன். விடியற்காலை 3 மணிக்கு ஈரோடுக்கு போய் சேர்ந்தேன். எனக்காக ஈரோட்டில் ஒரு வீட்டை ஷமில் பாஷா பார்த்துக் கொடுத்தார். அவர்

அந்த வீட்டிற்கு காலையில் வந்து போய்விட்டார். நான் ஒருநாள் தான் அந்த வீட்டில் இருந்தேன். ஷமில் பாஷா, வீட்டிற்கு போய்விடுங்கள் சரியா வராது, உனக்கும் பிரச்சனை, எனக்கும் பிரச்சனை வீட்டிற்கு போய்விடுங்கள் என்று சொன்னார்.

அம்மாவுக்கு போன் செய்து சொல்கிறேன், நான் உன்னை ரயில் ஏற்றிவிடுகிறேன் என்று சொன்னார். அம்மாவுக்கு போன் செய்துவிட்டேன் என்று என்னிடம் சொன்னார். என்னை ஊருக்கு போங்கள், உன் அம்மா வந்து அழைத்து செல்வார் என்று ஷமில் பாஷா சொன்னார். அவர், என்னை ரயில் ஏற்றி அனுப்பி வைத்தார். நான் வீட்டிற்கு போக மனமில்லாமல், நேராக சென்னை சென்ட்ரல் ரயில் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டேன்.

என்னை அரக்கோணத்தில் இருந்து ஒருவர் பின்தொடர்ந்து என்னை கோயம்பேடுக்கு அழைத்து வந்தார். அவர் பெயர் சுரேந்தர். உனக்கு தேவையில்லாத வேலை, உன் வேலையை பாருங்க என்று அவரிடம் நான் சொல்லிவிட்டேன். பிறகு நீ யார் என்று என்னை compel செய்து கேட்டார். அதனால் நான் சுரேந்திரிடம் வீட்டை விட்டு வெளியே வந்த விவரம் சொன்னேன். இரவில் அங்கு தங்க முடியாது என்பதால் பாண்டிச்சேரி போய்விட்டு திரும்பி வந்துவிடலாம் என்று சொன்னார்.

பாண்டிச்சேரிக்கு பேருந்தில் சென்றுவிட்டு காலையில் திரும்ப சென்னைக்கு வந்துவிட்டோம். சென்னைக்கு வந்தபிறகு போன் மூலமாக ஆஸ்டல் ஏதாவது உள்ளதா என்று பார்த்தார்.

அதன்பிறகு அம்பத்தூரில் வாணிவேணி ஆஸ்டல் இருப்பதாக 29.5.2015 அன்று போனோம். என்னை ஆஸ்டலில் சேர்த்துவிட்டு சுரேந்தர் போய்விட்டார். அதன்பிறகு 10 நாட்கள் ஆஸ்டலில் தான் இருந்தேன். துணிக்கடையில் அதே தெருவில் எனக்கு வேலை கிடைத்தது. மேற்படி ஆஸ்டலுக்கு தங்குவதற்கு பணம் கட்டினோம். 20 நாட்கள் துணிக்கடைக்கு வேலைக்கு சென்றேன்.

ஆஸ்டலில் நான் தங்கும்போது உறவினர் என்று சொல்லி சுரேந்தர் என்பவரின் ஆதார் கார்டு கொடுத்து மேற்படி ஆஸ்டலில் சேர்ந்தேன். நான் வேலைக்கு போய்விட்டு ஆஸ்டலுக்கு வந்தேன். 4.6.2015 ம் தேதி இரவு ஆஸ்டலுக்கு போலிசார் வந்தார்கள். நான் காணாமல் போய்விட்டதாக என் கணவர் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார், அதனால் என்னை விசாரிக்கவேண்டும் என்று என்னை அழைத்துக் கொண்டு வாணியம்பாடிக்கு போனார்கள். வேப்பங்குப்பம் காவல் நிலையத்திற்கு அழைத்து போனார்கள்.

அதன்பிறகு வேலூர் Magistrate இடம் கூட்டி வந்தார்கள். அங்கிருந்து அரியூரில் ஒருநாள் home ல் தங்க வைத்தார்கள். அங்கு CBCID DSP என்னை விசாரித்தார்கள். அப்போது தான் ஷமில் பாஷா இறந்தது எனக்கு தெரியும். என்னை காணோம் என்று விசாரிக்கும்போது தான் போலிசார்கள் அடித்து ஷமில் பாஷா இறந்துவிட்டதாக தெரியும்.

ஆகஸ்டு மாதம் 2016ம் வருடம் நான் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பு வாக்குமூலம் கொடுத்தேன். நான் வாக்குமூலம் கொடுத்த பின்னர் நான் கையெழுத்து போட்டேன். அது குவிமுச பிரிவு 164 ன்படியான வாக்குமூலம் ஆகும். நான் அளித்த கு.வி.மு.ச. பிரிவு 164–ன்படியான வாக்குமூலம் அ.சா.ஆ.18 ஆகும். நான் கொடுத்த வாக்குமூலத்தை தான் பதிவு செய்தார்கள். நான் கொடுத்த வாக்குமூலத்தை படித்துப் பார்த்தேன். சரியாக இருந்தது. அதன்பின்னர் தான் கையெழுத்து போட்டேன். நான் கூறிய விவரம் தான் வாக்குமூலத்தில் இருந்தது.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரவர்மன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.ரவி வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.08 16:22:57 +0530